சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

<u>அசல் வழக்கு எண்.133/2022</u>

04.02.2026

வா.சா.1 திரு.ராமு, த/பெ. நல்லசாமி

**சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு மறு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.**

**பிரதிவாதி தரப்பு மறு குறுக்கு விசாரணை**

பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை படித்து பார்த்துள்ளேன். எதிர்வழக்குரையில் எனது மகளிடம் பிரதிவாதியின் மனைவி சீட்டு போட்டதாகவும், ஏலத்தில் கலந்து கொண்டு தொகை எடுத்ததற்காக பிரதிவாதியின் காசோலையை பிரதிவாதியின் மனைவியிடம் எனது மகள் வாங்கியதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் பிரதிவாதியோ அவரது மகளோ சீட்டு போட்டார்களா, இல்லையா என்ற விவரம் எனக்கு தெரியாது. பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை மேற்கண்டவாறு சொல்லியுள்ள சங்கதியை மறுத்து சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரைக்கு மறு எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது மகளிடம் சீட்டு எடுத்த வகையில் பிரதிவாதியின் மனைவி வங்கி கணக்கிலிருந்து எனது மகள் வங்கி கணக்கிற்கு பணம் செலுத்தப்பட்டுள்ளது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. நானும் எனது மகளும் நல்ல உறவுமுறையில் உள்ளோம் என்றால் சரிதான். ஆனால் அவரின் வரவு, செலவு பற்றி தெரியாது. எனது மகளை விசாரணை செய்தால் உண்மை தெரியும் என்றால் விசாரித்துக்கொள்ளலாம். பிரதிவாதி என் மீது காவல்நிலையத்தில் புகார் கொடுத்து விசாரணை செய்யப்பட்டது என்றால் இல்லை. போலீசார் விசாரித்தார்கள் என்றாலும் வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. தூயக்கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகாததால் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு காசோலையின் அடிப்படையில் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.